22 .02.2021

OS.No. 191/2013

PW.1 - பாபு வெங்கட்ராமராவ் – பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது தகப்பனார் இறக்கும்போது அவருக்கு வயது சுமார் 80 வயதிருக்கும். இறக்கும்போது ஆரோக்கியமாகத்தான் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. 2,3 மாதங்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். என் தகப்பனாருக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது என்று சொன்னால் அவ்வளவாக தெரியாது. என் தகப்பானர் தஞ்சையில் துணிவியாபாரம் செய்துவந்தார். என் தகப்பனாருக்கு ஆரணி சொத்தில் பாகம் வந்தபின்னர்தான் ராணிபேட்டை வீட்டு கடனை செலுத்தினார். தாவாசொத்தை கடன் வாங்கி வாங்கியதாக பிராதில் சொல்லியுள்ளேன். என் தகப்பனார் வைத்தி என்பவரிடம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் வைத்தி என்பவரிடம் கடன் வாங்கிய ஆவணம் என்று சொன்னால் ஆவணத்தின் வாசகங்கள் ஆங்கிலத்தில் உள்ளதால் எனக்கு படிக்க தெரியவில்லை. அதன் ஒவ்வொரு பக்கங்களில் உள்ள கையொப்பங்கள் எனது தகப்பனாருடையது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணத்திலுள்ள கையொப்பம் மட்டும் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அடமான ஆவணம் 9.10.1960 ல் போடப்பட்டுள்ளதுஎன்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் தாவா சொத்திற்கான கிரைய பத்திரம் என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் அடமானம் கொடுப்பதற்கு முன்பே ராணிபேட்டை சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த கடனை என் தகப்பனார்தான் பைசல் செய்தார் என்று சொன்னால் சரிதான். கடனை பைசல் செய்தபின்னர்தான் 1970 லிருந்து 1980 க்குள்ளாக கிருஷ்ணகிரியில் உள்ள சொத்துக்களை வாங்கினார் என்று சொன்னால் சரிதான். அடமான பணத்தை கொண்டுதான் தாவா சொத்தை வாங்கியதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. தாவாவை 2011 ம் வருடம் பிரதிவாதிகள் பாகம் பிரித்துக்கெண்டதாக சொல்லியுள்ளேன். மேற்படி ஆவணத்தை நான் பார்த்ததில்லை. ஆனால் 1ம் பிரதிவாதி தனக்கு வந்த பாகத்தை விற்கப்போவதாக சொன்னதின் பேரில் மேற்படி விவரத்தை தெரிந்துகொண்டேன். மேற்படி பாகப்பிரிவினை

நகல்களை எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. 2013 ல் தான் பத்திரம் ஆனது எனக்கு தெரியும். என் தகப்பனார் எழுதி வைத்த உயில் ஆவணத்தின் அடிப்படையில்தான் பாகப்பிரிவினை பத்திரம் ஆனது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1993 ம் ஆண்டு எனது தகப்பனார் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் 1996 ல் இறந்துவிட்டார். 2013 ல்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தாயார் என் தகப்பனாருக்கு முன்பாகவே இறந்துவிட்டார். தாவா சொத்து முழுக்க முழுக்க என் தந்தை சுயசம்பாத்திய சொத்து என்று சொன்னால் சரியல்ல. ஆரணியிலுள்ள சொத்தை விற்று ராணிபேட்டை வீட்டிற்கான கடனை பைசல் செய்தார். ஆரணி சொத்தை விற்றுதான் ராணிபேட்டை சொத்து வாங்கப்பட்டது தவறு என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியும் என்றும் நான் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நான் பிரவேசிக்கவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. 7 ம் பிரதிவாதிக்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மைகளை மறைத்து தாக்கல் செய்துள்ள மேற்படி வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்பதால் செலவு தொகையுடன் தள்ளுபடிக்குரியது என்று சொன்னால் சரியல்ல.